MediShield Life

# உங்கள் சந்தாக் கட்டணத்தைக் கட்டுப்படியாகும்படி வைத்திருப்போம்

மெடிஷீல்டு லைஃப் திட்டம் சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் மேம்பட்ட காப்பு வழங்கும். மேம்பட்ட காப்பு வழங்கப்படுவதால், சந்தாக் கட்டணங்களும் உயரும். மெடிஷீல்டு லைஃப் சந்தாக் கட்டணங்களைக் கட்டுப்படியாகும் அளவில் வைத்திருப்பதற்கு அரசாங்கம் குறிப்பிடத்தக்க ஆதரவளிக்கும்.

## 1 குறைந்த வருமானம் முதல் நடுத்தர வருமானம் வரை ஈட்டுவோருக்கு சந்தாவைச் செலுத்த நிதி உதவிகள்

- தனிநபரின் மாதாந்தரக் குடும்ப சராசரி வருமானம் $2,600 வரையில் இருப்பதோடு, ஆண்டு மதிப்பு $21,000 அல்லது அதைவிடக் குறைவாக இருக்கும் வீடுகளில் வாழும் சிங்கப்பூரர்களுக்குக் கிடைக்கும்.
- சிங்கப்பூர் குடும்பங்களில் மூன்றில் இரண்டு குடும்பங்கள் பயனடையும்.
- மெடிஷீல்டு லைஃப் திட்டத்தின் நிரந்தர அம்சமாக நிலைநாட்டப்படும்.

எடுத்துக்காட்டு: தனிநபரின் மாதாந்தரக் குடும்ப சராசரி வருமானத்தின் கணக்கீடு




## 2 நான்கு ஆண்டுகளுக்கு இடைக்கால நிதி உதவிகள்

- மெடிஷீல்டு திட்டத்திலிருந்து மெடிஷீல்டு லைஃப் திட்டத்திற்கு மாறிச்செல்வதை எளிதாக்கும்.
- வருமானம் எதுவாக இருந்தாலும், சந்தாக் கட்டண உயர்வை எதிர்நோக்கும் சிங்கப்பூர் குடிமக்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.




இடைக்காலக் கட்டணச் சலுகை விகிதம்

## 3 வாழ்நாள் முழுவதும் முன்னோடித் தலைமுறை நிதி உதவிகள்

- 40% முதல் 60% வரை சிறப்பு நிதி உதவிகள்.
- பிறப்பு ஆண்டைப் பொறுத்து, ஒவ்வோர் ஆண்டும் மெடிசேவ் கணக்கில் $200 முதல் $800 வரை பணம் நிரப்பப்படும்.
- கட்டணச் சலுகைகள், பணம் நிரப்பல்கள் ஆகியவற்றுக்குப் பிறகு, முன்னோடிகள் அனைவரும் குறைவான சந்தா கட்டுவார்கள்.



## 4 சந்தாவைச் செலுத்த கூடுதல் ஆதரவு

- கட்டணச் சலுகைகளுக்குப் பிறகும் சந்தாக் கட்டணத்தைக் கட்ட இயலாதவர்கள் ஆதரவு பெறுவார்கள்.
- வசதி குறைந்தோர் காப்பீட்டை இழக்கமாட்டார்கள்.





உங்கள் முழு சந்தாவை மெடிசேவ் மூலம் செலுத்தலாம். ஜனவரி 2015ல் இருந்து முதலாளிகள் கூடுதலாகச் செலுத்தும் ஒரு விழுக்காடு மெடிசேவ் சமர்பிப்பு, பெரும்பாலான சிங்கப்பூரர்களின் மெடிஷீல்டு லைஃப் சந்தாக் கட்டண உயர்வை ஈடுகட்டிவிடும்.

மெடிஷீல்டு லைஃப் பற்றி சுகாதார அமைச்சு உங்களுக்காகப் படைக்கும் எட்டு-பாகத் தொடரின் நான்காம் பாகம் இது.
மெடிஷீல்டு லைஃப் பற்றி மேல்விவரம் அறிய, www.medishieldlife.sg இணையப்பக்கம் பார்க்கவும்.

MINISTRY OF HEALTH
SINGAPORE